BSNLEU

# தொலை தொடர்புத் தோழன்

ஏப்ரல் - 2009 ஆசிரியர் : S.செல்லப்பா இதழ் 88

## நியாயமான ஊதியத்தை நோக்கி...

BSNL ஊழியர்களை ஊதிய மாற்று பேச்சு வார்த்தைகள் சரியான முறையில் துவங்கியுள்ளன. இந்தப் பணியை திறமையாக நடத்தி முடித்திட மூன்று துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் சம்பளம், அலவன்ஸ் மற்றும் ஓய்வூதியம் பற்றி தனித்தனியாக விவாதித்து 25-03-2009ஆம் அறிக்கை சமர்ப்பிக்கும்.

BSNL-இல் உள்ள அதிகாரிகள் புதிய சம்பள விகிதம் பெற்று விட்ட சூழ்நிலையில் ஊழியர்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது என்ற வருத்தம் ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ளது.

பொதுத்துறைகளின் ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சம்பள மாற்றம் செய்திட இருவேறு முறைகள் நிலவுகின்றது. ஊழியர்கள் கோரிக்கைகளை முன் வைத்து விவாதிக்கவும், விவாதித்த பின்னர் இறுதியாக ஒப்பந்தத்துக்கு கையெழுத்துப் போடவும் உரிமை உண்டு.

ஆனால் பொதுத்துறை அதிகாரிகளுக்கு அத்தகைய உரிமை வழங்கப்படவில்லை. அரசுதான் அவர்களுடைய ஊதியத்தையும் பல்வேறு அலவன்சுகளையும் முடிவு செய்யும். அதனடிப்படையில் ராவ் கமிட்டி அமைக்கப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் தரம் பிரிக்கப்பட்டு அதனடிப்படையில் BSNL அதிகாரிகளுக்கு 01-12-2007 முதல் 30% சம்பள உயர்வு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. தற்போது பரிந்துறை ஏற்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் ஊழியர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 2000ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட BSNL நிறுவனத்தில் ஊழியர்கள் தான் முதன் முதலில் (2002ஆம் ஆண்டு) புதிய சம்பள ஒப்பந்தம் போட்டனர்.

ஆனால் அதிகாரிகள் சுமார் 2 வருடங்கள் காத்திருந்து, பின்னர்தான் புதிய சம்பளம் வாங்கினர். 2002ஆம் ஆண்டில் நாம் திருப்திகரமாக ஒப்பந்தம் போட்டிருந்தாலும், ஆயிரக்கணக்கில் நிலுவைத் தொகை வாங்கியிருந்தாலும் நமக்குப் பின்னால் வந்த அதிகாரிகள் நல்ல ஊதியம் பெற்றனர். அதனால் ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள ஊதிய இடைவெளி மேலும் அதிகரித்தது.

இம்முறை அதிகாரிகள் முதலில் பெற்றுள்ளனர். இதன் காரணமாக ஊழியர்கள் அதிகாரிகளின் சம்பளத்துடன் ஒப்புமை செய்யவும் நியாயமான ஊதிய உயர்வைப் பெறவும் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கடந்த கால அநீதிகளை களையவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நமது ஊதிய விகிதம் தொடர்பாக அமைக்கப்பட்ட உப குழு மார்ச், 17 மற்றும் 18ஆம் தேதிகளில் SAIL, NTPC மற்றும் GAIL ஆகிய பொதுத்துறை நிறுவனங்களின் தலைமையத்திற்கு சென்று அதில் தற்போது உள்ள ஊதிய விகிதங்களையும், தொழிற்சங்கங்களின் புதிய கோரிக்கைகளையும் தெரிந்து வந்துள்ளனர். ஓரிரு தினங்களில் உபகுழுக்களின் அறிக்கை இறுதிப்படுத்தி மார்ச் 25க்கு முன் ஊதிய மாற்றக்குழுவிற்கு தாக்கல் செய்யும்.

பேச்சு வார்த்தையில் சாதகமான முடிவுகள் எட்டப்படவில்லை எனில் போராட மத்தியச்சங்கம் முடிவெடுத்துள்ளது. நல்ல தீர்ப்பு கிடைக்கவில்லையெனில் போராடி வெற்றி பெறுவோம். ●

BSNLEU

ஆசிரியர்

**S. செல்லப்பா**

ஆசிரியர் குழு

**M. முருகையா**

**A.பாபு ராதாகிருஷ்ணன்**

சங்க அலுவலகம்

R.K.ஸ்ரீனிவாஸ்
அப்பார்ட்மெண்ட்ஸ்
எண். 21,
பாரதியார் முதல் தெரு,
பழவந்தாங்கல்,
சென்னை - 600 114.

தொலைபேசி :

044-2231 2535

பேக்ஸ்

044-2232 1531

இணையதளம்

www.tncirclebsnleu.com

இ-மெயில்

chellapa_bsnleu@yahoo.co.in

ஒளி அச்சுக்கோர்வை

**அபிராமி கம்ப்யூட்டர்ஸ்**
24712615, 9444771137

# 15வது நாடாளுமன்றம்... யாருக்காக...?

எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்கு இந்திய நாட்டை யார் ஆளவேண்டும் என்பதை இந்திய நாட்டு மக்கள் ஏப்ரல், மே மாதத்தில் முடிவு செய்ய உள்ளார்கள். நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதும் அமையக்கூடிய 15வது நாடாளுமன்றம், யாருக்கான நாடாளுமன்றமாக இருக்க வேண்டும் என்பதும் நாம் யோசித்து முடி வெடுக்க வேண்டியது அவசியம்.

இந்திய நாட்டின் முதல் பாராளுமன்றத் தேர்தலில் ஜவகர்லால் நேரு தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாகவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கட்சியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒருசில முக்கியமான நாட்டு நலன் தொடர்பாக ஒன்றுபட்டு செயல்பட்டனர். 1967இல் நடைபெற்ற பொதுத்தேர்தல் இந்திய நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி தமிழகம் உள்ளிட்ட ஒன்பது மாநிலங்களில் எதிர்க் கட்சியாக அமர வேண்டிய நிலை ஏற்பட்டது. 1997இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை அமைந்தது. 1979இல் திரு.சரன்சிங் பிரதமராகும் வாய்ப்பிற்கு இடதுசாரிகளின் தயவு தேவைப்பட்டப்போது மத்திய அரசு ஊழியருக்கு போனஸ் உட்பட சில நன்மைகள் கிடைத்தன. 1996இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இடதுசாரிகளின் ஆதரவோடு ஐக்கிய முன்னனி ஆட்சி மலர்ந்தது. மத்திய அரசு ஊழியருக்கு ஊதிய குழு, பரிந்துரைத்ததைவிட அதிகமாக, அதாவது 40 சதவிகித ஊதிய உயர்வு கிடைத்தது. பின்னர் ஒரு ஆறு ஆண்டுகாலம் பிஜேபி தலைமையிலான ஆட்சி நடைபெற்றது. இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமையை மதத்தின் பெயரால் உடைக்கும் முயற்சிகள் நடந் தேறியது. அரசுத்துறையாக இருந்த தொலைத்தொடர்பு இலாகா BSNL எனும் பொதுத்துறையாக மாற்றப்பட்டது. பொதுமக்களின் சொத்துக் களை அடிமாட்டு விலைக்கு விற்பதற்கென்றே ஒரு இலாகாவை உருவாக்கி ஒரு அமைச்சரையும் உட்காரவைத்த பெருமை பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசீய ஜனநாயக் கூட்டணியையே சாரும்.

2004இல் நடைபெற்ற 14வது நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைத்தது. வரலாற்றில் முதல் முறையாக இடதுசாரிகளின் தயவில் காங்கிரஸ்கட்சி ஆட்சி அமைத்தது. இடதுசாரிகளின் தயவு தேவைப் பட்டதால், நாட்டிலுள்ள உழைப்பாளி மக்கள், பெண்கள், வேலை யில்லாதவர்கள், பசியால் வாடும் ஏழைகள், விவசாயிகள் மற்றும் ஒடுக் கப்பட்ட மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் கவனிப்ப தாக தேசீய குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை உருவாக்கினார்கள்.

அரியனை ஏறியவுடன் அனைத்தையும் மறந்தனர். இடதுசாரிகளின் நிர்பந்தம் காரணமாக பல பொதுத்துறை நிறுவனங்கள் காப்பாற்றப் பட்டது. தேசீய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டம், வன உரிமை அங்கீகாரச்சட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் சட்டமாக்கப்பட்டது. பெட்ரோல் டீசல் விலை உயர்வு பலமுறை தடுக்கப்பட்டது. அமெரிக்கா வோடு அனுசக்தி ஒப்பந்தம் என்ற பெரிய இந்திய நாட்டின் இறை யாண்மையை காவு கொடுப்பதில் காங்கிரஸ் அரசு உறுதியுடன் நின்றதால் இடதுசாரிகள் காங்கிரஸ் அரசிற்கு கொடுத்த ஆதரவை விலக்கிக் கொண்டது. ஆனாலும் குதிரை பேரத்தில் ஈடுபட்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றனர்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முன்னனி அரசாங்கம், அமெரிக்க நிறுவனங்களை, அமெரிக்க முறையிலான பித்தலாட்டங் களை, அமெரிக்க முறையிலான பங்கச் சந்தை சூதாட்டத்தை, இறுதி யாக அமெரிக்க பொருளாதார நெருக்கடியை இந்தியாவிற்குள் கொண்டு வந்தது. நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள்கூட பாலஸ்தீன மக்களை கொன்று குவிக்கும் இஸ்ரேலுக்கும், ஈராக்கில் கொலைவெறி தாண்டவமாடிய அமெரிக்காவிற்கும் ஆதரவாக நிற்கும் நிலை உருவாகி உள்ளது.

அமெரிக்காவின் கொள்கையான “Hire and Fire” இந்திய நாட்டில் அமுலாக்கப்படுவதால் ஒப்பந்த முறையும், தற்காலிக முறையும் பெருத்து வருகிறது. நிரந்தரப் பணிகள் சுருக்கப்பட்டு வருகிறது. விலைவாசி விண்ணை முட்டுகிறது. வேலை இன்மை மூச்சை முட்டுகிறது. விவசாயிகளின் பட்டினிச் சாவும், தற்கொலைகளும் தொடர்கிறது. பொதுத்துறைகள் மீது தாக்குதல் தொடர்கிறது. இந்திய நாட்டின் 77 சதவீதமான மக்கள் நாளொன்றுக்கு 20 ரூபாய்க்கும் கீழ் வருமானம் பெறும் அவல நிலையை அர்ஜுன் குப்தா கமிட்டி அறிக்கை தெளிவாக்குகிறது.

இந்தச்சூழ்நிலையில் இந்திய நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்வதாகவும், பண வீக்கம் குறைவதாக கூறிக்கொண்டு ஒரு கூட்டமும், சோத்துக்கு வழியில்லாத இந்திய நாட்டில் இலவச கம்யூட்டரும், இலவச செல்போனும் தருவதாக மற்றொரு கூட்டமும் வாக்குக் கேட்டு வருகிறது. மறுபுறத்தில் என்றைக்கும் தொழிலாளி வர்க்கத்தின் பக்கமும், பொதுத்துறையை காப்பாற்றவும், ஏழை எளிய, விவசாயிகளின் வாழ்வை பாதுகாக்கவும் மனஉறுதியுடன் நின்று கொண்டிருக்கும் இடதுசாரிகளோடு இணைந்த மூன்றாவது அணி ஒன்றும் களத்தில் குதித்துள்ளது.

மதவாதத்தையும், அமெரிக்காவின் நாசகர பொருளாதாரக் கொள்கைகளை தூக்கிப்பிடிக்கும் சக்திகளையும் புறந்தள்ளி ஒரு புதிய மாற்றலை வெற்றி பெறச் செய்வோம். ஏழை எளிய மக்களோடு, பொதுத்துறைகளையும் காப்பாற்றும் நமது சக்திகளை பலப்படுத்து வோம். 15வது நாடாளுமன்றத்தையாவது நமக்கான நாடாளுமன்றமாக மாற்றுவோம். ●

## உள்ளே...


*நியாயமான ஊதியத்தை நோக்கி...* 1

*15வது நாடாளுமன்றம் யாருக்காக?* 2

*தனியாருக்கு துணைபோகும் மாநில நிர்வாகத்தைக் கண்டித்து... மார்ச் 20 மாபெரும் தர்ணா* 4

*டெல்லி மத்திய செயற்குழு அறைகூவல்* 5

*வெற்றி விழா...* 6

*பஞ்சப்படி அறிவிப்பு* 6

*நினைவாஞ்சலிக் கூட்டம்* 7

*ஆரணியில் முப்பெரும் விழா* 7

*உத்தரவுகள் அமலாகி விட்டதா?* 7

*மாநில சிறப்பு சேமநல நிதி திட்டம்* 8

*பதவி உயர்வு திட்டம்* 8

*நெல்லை மகளிர் தினம்* 8

*மாநில சங்கத்திலிருந்து...* 9

BSNLMRS *திட்டம் பரிசீலனை* 9

BSNL *வளர்ச்சியில் கேரள அரசு* 10

EPF *பணம் வாபஸ்* 10

*ஒப்பந்த ஊழியர் மாநில செயற்குழு முடிவுகள்* 10

*பிரான்ஸை உலுக்கும் கறுப்பு வியாழன்* 11

BSNLEU *வில் இணைந்தவர்கள் பட்டியல்* 11

*வரலாற்றில் ஒரு துளி* 12

# தனியாருக்கு துணைபோகும் மாநில நிர்வாகத்தைக் கண்டித்து...

# மார்ச் 20 மாபெரும் தர்ணா

மாநில நிர்வாகம் ‘BSNL மேளா’ என்ற பெயரில் முகவர்களுக்கு பணியாற்றிட BSNL ஊழியர்களை பயன்படுத்தும் அவலத்தைக் கண்டித்து அனைத்து விற்பனைக் குழுவிலிருந்தும் (Sales Team) நமது ஊழியர்களை விலக்கிக் கொள்ள மாநிலச் சங்கம் அறைகூவல் விடுத்தது. மாநிலம் முழுவதும் நமது தோழர்கள் இந்த அறைகூவலை ஏற்று, மாவட்ட நிர்வாகத்திற்கு எதிர்ப்பினை பதிவு செய்துள்ளனர். மாநில சங்கத்தின் பாராட்டுக்கள்.

“விற்பனைக்குழு (Sales Team) என்பது BSNL நிறுவனத்தின் பொருட்களை நாமே விற்பனை செய்வதற்குத்தான். தனியாருக்கு உழைத்து அவர்களை மேம்படுத்துவதற்காக அல்ல” என்பதே நமது போராட்டத்தின் அடிப்படையாகும். எனினும் மாநில நிர்வாகம் மற்றும் பல மாவட்ட நிர்வாகங்கள், முழுமையாக Sales Team-லிருந்து விலகாமல், முகவர்களுக்கு மட்டும் பணியாற்றிட வேண்டாம், மற்ற பணிகளை எடுத்துச் செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தன. வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்ற அடிப்படையில் Sales Team-லிருந்து விலகும் முடிவை கைவிட்டு “முகவர்களுக்கு பணியாற்ற முடியாது” என்ற கொள்கை போராட்டத்தை தொடர மாநில சங்கம் முடிவு எடுத்துள்ளது.

மாநில நிர்வாகத்தோடு இருமுறை பேச்சு வார்த்தை மாநிலச் சங்கம் நடத்தியுள்ளது. மாநில நிர்வாகத்திடம் இரண்டு அம்ச கோரிக்கையை 11-3-2009 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வலியுறுத்தினோம்.

1. BSNL முகவர்களுக்கு நடத்தப்படும் மேளாவில் BSNL ஊழியர்சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள்.
2. BSNL நிறுவனமும் ஊழியர்களும் இணைந்து (முகவர் இல்லாமல்) தமிழகம் முழுவதும் மேளா ஒரு வார காலம் நடத்த வேண்டும். அந்த மேளாவில் BSNL ஊழியர் சங்க உறுப்பினர்கள் விடுப்பு எடுத்துக் கூட பணியாற்றிட தயார் என்பது BSNL ஊழியர் சங்க தஞ்சை மாநில செயற்குழுவின் ஏகோபித்த முடிவு. முகவர்கள் பிரச்சனை தெரியும் முன்பே, எடுக்கப்பட்ட முடிவும்கூட. எனவே மேளாவை நடத்திட வேண்டுகோள் விடுத்தோம். அப்படி நடத்தப்படும் மேளாவில் சிம்கார்டு விற்பனை என்பது முகவர்களுக்கு விற்கும் விலையிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்பதே நம் கோரிக்கை.

மாநில நிர்வாகம் நமது நியாயமான இக்கோரிக்கையை ஏற்று அமலாக்கியிருந்தால், BSNL நிறுவன வளர்ச்சியில் நிர்வாகம் ஊழியர்களோடு இணைந்து நிற்கிறது என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கும்.

மாறாக மாநில நிர்வாகம் நமது கோரிக்கையை ஏற்க மறுக்கிறது. இப்படிப்பட்ட மேளா நடத்தினால் முகவர்கள் பாதிக்கப்படுவார்களாம். BSNL நிர்வாகம் முகவர்களின் விற்பனையை அதிகரிக்க கடுமையான முயற்சி எடுத்து வருகிறதாம். நாம் விரும்பும் மேளா நடத்தினால் முகவர்களுக்கு போட்டியாக அமைந்து விடுமாம். முகவர்களின் முகம் சுருங்கி விடுமாம். இவையெல்லாம் மாநில நிர்வாகத்தின் வியாக்கியானங்கள். மாநில நிர்வாகம் தனியார் மயத்தை ஆதரிப்பது மட்டுமல்லாமல் ஊக்கப்படுத்துகிறது என்ற நமது கணிப்பு சரியாகிவிட்டது.

மாநில நிர்வாகத்தின் இந்நிலையை ஏற்க முடியாது என உறுதிப்பட கூறிவிட்டோம். “முகவர்களை Promote செய்கிறோம்” என்ற நிர்வாகத்தின் நிலை ஏற்கப்பட்டால் ஊழியர்களின் நிலை அபாயகரமானதாகிவிடும். இன்று முகவர்களின் பொருட்களை

விற்கச் சொல்லும் நிர்வாகம், நாளை முகவர்களிடம் சென்று வருகை பதிவேட்டில் கையெழுத்திடுங்கள் என்று கூட சொல்லலாம். முகவர்களுக்கு என தனியாக நமது ஊழியர்களை ஒதுக்கி சேவகம் பண்ண உத்தரவிடலாம். ஏனெனில் “முகவர்கள் தான் Business செய்கிறார்கள் லாபம் வருகிறது. நீங்கள் இல்லை” என நம் ஊழியர்களை உதவாக் கரை ஆக்கிட நிர்வாகம் கணக்கு போடுகிறது போலும். ஒருபோதும் இந்நிலையை நாம் அனுமதிக்க மாட்டோம்.

BSNL நிறுவனம் நமது நிறுவனம். ஊழியர்களின் உழைப்பால் உருவான நிறுவனம் BSNL. இந்நிறு வனத்தின் பொருட்களை நாம் விற்பது என்பது நமது உரிமை. அதை தடுக்க நிர்வாகம் நினைத்தால், தட்டிக்கேட்டு, உரிமைக்காக போராடுவது நமது தலையாய கடமையாகும்.

நமது குறைந்த பட்ச கோரிக்கையை கூட ஏற்காத மாநில நிர்வாகத்திடம், இனி போராடுவதை தவிர வேறுவழி இல்லை என உறுதிபட கூறிவிட்டோம். தமிழக United Forum-மும் இப்போராட்டத்தில் இணைந்துள்ளது.

மாநில நிர்வாகத்தின் தனியார்மய மோகத்தை முறியடிக்க, BSNL நிறுவன ஊழியர்களை முகவர் களிடம் பணியாற்றும் அவலத்தை தடுக்க, BSNL நிறுவன பொருட்களை நாமே விற்பனை செய்ய அனுமதிக்க வலியுறுத்தி,

முதல் கட்டமாக மார்ச் 20, 2009 அன்று அனைத்து மாவட்டங்களிலும், (காரைக்குடி தவிர) தலைமைப் பொது மேலாளர் அலுவலகம் முன்பும் தர்ணா போராட் டத்தை வெற்றிகரமாக நடத்தி உள்ளோம். 2500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இத்தர்ணா போராட்டத்தில் எழுச்சியுடன் கலந்து கொண் டுள்ளனர். மாநிலச்சங்கத்தின் பாராட்டுக்கள்.

தலைமைப் பொது மேலாளர் அலுவலகம் முன்பு நடைபெற்ற தர்ணாவிற்கு மாநிலத் தலைவர் அம்புரோஸ் குழந்தைசாமி தலைமைதாங்கினார். மாநிலச் செயலர், மாநில உதவிச் செயலர் தோழர் பாபு ராதாகிருஷ்ணன், மாநில உதவித் தலைவர் தோழர். சி.பழனிச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள். 150க்கும் மேற்பட்ட தோழர்கள் தர்ணாவில் கலந்து கொண்டனர்.

மாநில நிர்வாகத்தின் போக்கில் மாற்றம் வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இல்லையெனில் நமது போராட்டம் தொடரும். ●

# டெல்லி மத்திய செயற்குழு அறைகூவல்

மூன்றாவது முறையாக சங்க அங்கீகாரத் தேர்தலில் நமது BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற்ற சூழ்நிலையில் மத்திய செயற்குழு கூட்டம் மார்ச் 5, 6 தேதிகளில் டெல்லியில் நடைபெற்றது.

மார்ச் 5ந்தேதி நடைபெற்ற சேவை மேம் பாட்டுக் கருத்தரங்கிளல் BSNL CMD திரு. குல்தீப் கோயல் அவர்களும் CITU தலைவர் தோழர் எம்.கே. பாந்தே அவர்களும் சிறப்புரை யாற்றினார்கள்.

பொதுச் செயலர் தோழர் V.A.N. நம்பூதிரி சமர்ப்பித்த செயல்பாட்டு அறிக்கையின் மீது நீண்ட விவாதம் நடைபெற்றது. இறுதியில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

- உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதே சமயம் கிளை முதல் மத்திய சங்கம் வரை தனது செயல்பாட்டை முறைப் படுத்த வேண்டும். தொழிலாளி வர்க்கத்திற்கும், சமூக கடமைகளிலும் ஒரு உறுதியுடன் செயல்படுவதை அதிகரிக்க வும் தொழிற்சங்க வகுப்பும் நடத்தப்பட வேண்டும்.
- உடனடி ஊதிய மாற்றம் புதிய பதவி உயர்வு கொள்கை அமுலாக்கம், சம்பள முரண்பாடு தீர்வு காண்பது, ஓய்வு பெற்ற ஊழியர்க்கு 50% பஞ்சப்படியை சம்பளத்துடன் இணைப் பது, பல்வேறு கேடர்களின் சம்பளத்தை உயர்நிலைப்படுத்தல் போன்ற பிரச்சனை களின் தீர்விற்காக வேலை நிறுத்தம் உட்பட பேராட்டம் நடந்துவதென தீர்மானிக்கப்பட் டது. இது சம்பந்தமாக கூட்டணி சங்கங்களு டன் பேசி தேதி முடிவு செய்யப்படும்.

வரக்கூடிய பாராளுமன்றத் தேர்தலில் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பிரச்சி னைகளுக்காக நிற்கக்கூடிய வேட்பாளர்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது. அதிலும் குறிப்பாக இடதுசாரி களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

பங்கு விற்பனை, அந்நிய நேரடி முதலீட் டிற்கு எதிர்ப்பு, ஸ்பெக்ட்ரம் பிரச்சினை போன்ற வைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு, மத்திய செயற்குழு முடிவு பெற்றது. ●

# வெற்றி விழா...

## விருதுநகர்:

11-2-2009 அன்று விருதுநகர் மாவட்டச் சங்கத்தின் சார்பாக வெற்றிவிழாக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்டத்தலைவர் தோழர். ஏ. சமுத்திரக்கனி தலைமையேற்க, GM அலுவலக கிளைச் செயலர் தோழர் எஸ். ரவீந்திரன் வர வேற்புரை நிகழ்த்தினார். மாநில உதவிச் செயலர் தோழர். எம்.முருகையா, மாநிலச் செயலர் தோழர். எஸ். செல்லப்பா, TEPU மாவட்டச் செயலர் தோழர் T. ஜெயக்குமார், TNTCWU மாவட்டச் செயலர் தோழர். K. முருகன் மற்றும் விருதுநகர் மாவட்டச் செயலர் தோழர். M. அய்யாசாமி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். மதுரை அலுவலக கிளைச் செயலர் தோழர். S. சூரியன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். தோழியர், மங்கையர்க்கரசி வெற்றியை பறைசாற்றும் கவிதையை வாசித்தார். மாவட்டப் பொருளாளர் தோழர். மகாலிங்கம் நன்றி கூறினார். விருதுநகர் மாவட்டத்தில் NFTE சங்கத்தை தோற்கடித்த உற்சாகம் ஊழியர்களிடம் எழுச்சியுடன் காணப்பட்டது. 350 தோழர்கள் கலந்து கொண்டது வெற்றியின் உற்சாகத்தை பறைசாற்றுவதாக இருந்தது. தமிழ் மாநிலச் சங்கத்தின் நெஞ்சுநிறை பாராட்டுக்களை உரித்தாக்குகிறோம்.

## தருமபுரி:

12-2-2009 அன்று தருமபுரி மாவட்டச் சங்கத்தின் சார்பாக வெற்றி விழாக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 4 தேர்தல்களிலும் வெற்றி பெற்ற பெருமிதத்தோடு 300க்கும் மேற்பட்டதோழர்கள் கலந்து கொண்ட கூட்டத்திற்கு தோழர் டி. பாஸ்கரன், மாவட்டத் உதவித்தலைவர் தலைமையேற்க, மாவட்ட உதவிச் செயலர் கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலத்தலைவர் தோழர் அம்புரோஸ் குழந்தைசாமி, மாநில உதவிச் செயலர் தோழர். எம். நாராயணசாமி, மாநிலச் செயலர் தோழர். எஸ்.செல்லப்பா, தோழர் டி.ரவீந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். SNEA, AIBSNLEA, TEPU, SC/ST மாவட்டச் செயலர்கள் வாழ்த்துரை வழங்க, BSNLEU மாவட்டச் செயலர் தோழர். S. அழகிரிசாமி அனைத்துத் தோழர்களையும் பாராட்டினார்.

'வர்க்க முழக்கம்' தருமபுரி மாவட்ட இதழை SNEA மாநில பொருளாளர் தோழர். ஜெயராமன் வெளியிட மாநிலச் செயலர் தோழர். எஸ்.செல்லப்பா பெற்றுக்கொண்டார். மீண்டும் மீண்டும் முத்திரை பதிக்கும் தருமபுரி மாவட்டச் சங்கத்தை மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது.

## தூத்துக்குடி :

13-3-2009 அன்று தூத்துக்குடி மாவட்டச் சங்கத்தின் சார்பாக வெற்றி விழாக் கூட்டம் மிக எழுச்சியுடன் நடைபெற்றது. NFTE சங்கத்தோடு கடுமையான போட்டியை சந்தித்து, 4 தேர்தல்கள் வெற்றி பெற்ற பெருமிதத்தோடு 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்டத் தலைவர் தோழர்.காந்தி தலைமை தோழர். பரமசிவம் CTX கிளைச் செயலர் வரவேற்புரை நிகழ்த்தினார். நமது சங்கத்தின் வழிகாட்டியாக செயல்படும் தோழர். S. மோகன்தாஸ் மாவட்டச் செயலர் தோழர். ஜெயமுருகன், மாநில உதவித் தலைவர் தோழர். சி. பழனிச்சாமி, மாநிலச் செயலர் தோழர் எஸ். செல்லப்பா, TEPU மாவட்டச் செயலர் தோழர். செல்வப் பெருமாள் ஆகியோர் சிறப்புறை யாற்றினார்கள். கடுமையான போராட்டத்திற்கிடையில் வெற்றியை உத்தரவாதப்படுத்தும் தூத்துக்குடி மாவட்டச் சங்கத்தை மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது. ●

## பஞ்சப்படி அறிவிப்பு

நீண்ட தாமதத்திற்குப் பின் ஜனவரி 1ஆம் தேதி முதல் வழங்கப்பட வேண்டிய 6.2 சதமான பஞ்சப்படி உத்தரவு வெளி யாகியுள்ளது. (உத்தரவு எண். 14-1/2007 - PAT (BSNL) dt. 09-03-2009) ஜனவரி 2009 முதல் நமக்கு கிடைக்க வேண்டிய IDA மொத்தம் 96.8% (DP 50% + IDA 46.8%).

# நினைவாஞ்சலிக் கூட்டம்..

## நெய்வேலி

கடலூர் மாவட்டத்தில் K.G. போஸ் அணியின் வளர்ச்சிக்கு நெய்வேலி பகுதியில் வித்திட்ட தலைவர்களில் ஒருவர், நெய்வேலி லைன்ஸ்டாப் சங்க கிளை செயலர், BSNLEU சங்கத்தின் மாவட்டத்தலைவர் என பல பரிணாமங்களில் துடிப்புடன் செயல்பட்டு, நமது மனங்களில் நீங்கா இடம் பிடித்த தோழர். பி. கலியன் அவர்களின் நினைவை போற்றும் வண்ணம் கல்வெட்டும், கொடிக்கம்பமும் நெய்வேலி கிளையால் நிறுவப் பட்டுள்ளது. தோழர். முத்துக்கிருஷ்ணன் கிளைத் தலைவர் தலைமையேற்க, மாவட்ட உதவிச் செயலர் தோழர். ரங்கநாதன் வரவேற்புரை நிகழ்த்த, மாவட்டச் செயலர் தோழர். K.T. சம்பந்தம், தோழர். கலியனினுக்கு நினைவஞ்சலி செலுத்தினர். சங்க கொடியை மாநில உதவிச் செயலர் தோழர். S.முத்துக்குமாரசாமி உணர்வுமிகு கோஷங்களுக் கிடையில் ஏற்றி வைத்தார்.

தோழர். கலியனின் நினைவு கல் வெட்டினை நமது அகில இந்திய சங்கத்தின் துணைப் பொதுச் செயலர் தோழர். பி. அபிமன்யு திறந்து வைத்து, தோழர். கலியனின் தொழிற் சங்க பணியினை நினைவு கூர்ந்து நினை வஞ்சலி செலுத்தியது அனைவரது கண்களிலும் கண்ணீரை வர வழைத்தது.

மாநிலச் செயலர் தோழர் S. செல்லப்பா, தோழர் கலியனின் படத்தை திறந்து வைத்து நினைவஞ்சலி சொற்பொழிவாற்றினார். கலியனின் குடும்பத்தார் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டது நெகிழ்வாக இருந்தது. நெய்வேலி கிளை மற்றும் கடலூர் மாவட்டச் சங்கத்தின் பணி மகத்தானது. ●

## ஆரணியில் முப்பெரும் விழா

BSNL ஊழியர் சங்கத்தின் ஆரணி கிளை முப்பெரும் விழாவாக 01-03-2009 அன்று சிறப்பாக நடத்தியுள்ளது.

ஆரணி கிளை பொதுவாகவே வித்தியாச மாக செயல்படக்கூடிய கிளை. கிளை ஆண்டு விழாவை நடத்துவதற்கு முன்பாக சாலையில் கொடியேற்று விழா, குடும்ப விழா இரண்டை யும் நடத்தியுள்ளது. சப்தர் ஹஸ்மி கலைக்குழு, மாணவி இலக்கியாவின் பரத நாட்டியம் என நடைபெற்ற விழாவில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

மாலையில் நடைபெற்ற கிளை ஆண்டு விழாவில் மாநில அமைப்புச் செயலர் தோழர். கொளஞ்சியப்பன், மாவட்டச் செயலர் தோழர் ஞானசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கிளைத் தலைவராக தோழர். ஏ. பாண்டு ரங்கன் STS, செயலராக தோழர். S.M. சேகர் TM, பொருளாளராக தோழர் பார்குகன் TM ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆரணிக்கிளையை மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது. ●

## உத்தரவுகள் அமலாகிவிட்டதா?

கடந்த ஆண்டில் ஊழியர்க்கு சாதகமான கீழ்க்கண்ட உத்தரவுகள் நமது முயற்சியால் வெளியிடச் செய்வோம்.

1. 26 வருடம் முடித்த தேதியிலிருந்து BCR சம்பளம் உயர் நிலைப்படுத்துதல் 1-12-98 முதல் 30-06-2005 வரையிலான காலத்தில் பதவி உயர்வு வாங்கிய தோழர்கள் தேதிய மாற்றியமைத்து நிலுவையை வழங்குதல்.
2. TTA ஊழியர்களுக்கு 6550 சம்பள விகிதத்திலிருந்து 7100 சம்பள விகிதத்தில் சம்பளத்தை நிர்ணயம் செய்யும் முறை.
3. 1994, 1995, 1996 ஆம் ஆண்டுகள் TTAவாக தற்காலிக பதவி உயர்வு பெற்று, 1996ஆம் ஆண்டில் TTAவாக நிரந்தர பதவி உயர்வு பெற்றவர்களுக்கு ரூ.4625/- சம்பள விகிதத்தை 01-01-96 முதல் நிர்ணயம் செய்தல்.
4. 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை TTA-க்களின் பயிற்சிக்கால தொகையை உயர்த்துதல்.

மேற்கண்ட உத்தரவுகள் எல்லா மாவட்டங் களிலும் அமுல் படுத்தப்பட்டு விட்டதா என்ற விபரத்தை மாநிலச் சங்கத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். ●

# மாநில சிறப்பு சேமநல நிதி திட்டம்

## (Circle Special Welfare Fund Scheme)

- 10ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் முதல் இடம் பெறும் மாணவர்க்கு ரூ.1000/- அதிக மதிப்பெண் பெறும் மாணவிக்கு ரூ.750/- அல்லது முதல் இடம் பெறும் மாணவிக்கு ரூ.1000/- அதிக மதிப்பெண் பெறும் மாணவர்க்கு ரூ. 750/- பரிசுத் தொகை வழங்குதல்.
- OC / SC/ST / OBC என அனைத்துப் பிரி வினர்க்கும் வழங்கப்படும்.
- மாநில பாடத்திட்டம் மற்றும் மத்திய பாடத் திட்டம் என தனித் தனியாக வழங்கப்படும். மொத்தம் 32 பரிசுத் தொகை வழங்கப்படும்.
- பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேல் படிப்பு பிரிவுகளில் தங்கப்பதக்கம் பெறும் மாண வருக்கு ரூ.1501/- ஊக்கத்தொகை.
- நீண்ட நாட்களாக நோய் வாய்பட்டிருக்கும் ஊழியர்க்கு மாத நிதி உதவி.
- குடும்ப உறுப்பினர் மரணமடைந்தால் நிதி உதவி.
- குடும்ப உறுப்பினர் மரணமடைந்தால் கடன் உதவி.
- மரணமடைந்த ஊழியரின் குடும்பத்திற்கு நிதி உதவி.
- மருத்துவ சிகிச்சைக்காக கடன்
- ஊழியரின் குழந்தைகளுக்கு புத்தகம் வாங்கிட கடன்.
- குடும்ப உறுப்பினர் திருமணத்திற்கு ரூ.100/- நன்கொடை
- மேற்படிப்பு படிக்கும் ஊழியர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் கல்விக் கடன்.
- ஊழியரின் உடல் நல முழுப் பரிசோதனை ரூ.500/- நிதி உதவி.
- முகக் கண்ணாடி வாங்குவதற்கு நிதி உதவி மற்றும் கடன்.
- ஓய்வு பெறும் ஊழியர்க்கு பரிசுக் காசோலை பிரீப்கேஸ்.
- உடல் ஊனமுற்ற, மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி.
- அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் ஊழியர் களுக்கு நிதி.
- சேமநல நிதிப் பரிவில் பணிபுரியும் ஊழியருக்கு மாத உதவி.
- கணினி மற்றும் செல் உபகரணம் வாங்க கடன் உதவி. ●

## பதவி உயர்வு திட்டம்

30-10-2008 அன்று கையெழுத்தான புதிய பதவி உயர்வு திட்டம் BSNL நிர்வாகக் குழு (BSNL Management Committee) கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டது. தற்போது BSNL-வுடன் முழு இயக்குநர் குழுவின் (BSNL Board Meeting) ஒப்புதலுக்கு வைக்கப்பட உள்ளது. புதிதாக ஒரு சம்பள விகிதம் உருவாக்கப்பட்டுள்ளதால் இயக்குநர் குழு ஒப்புதலுக்கு பின்னர் தொலை தொடர்பு இலாக்காவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அதன் பின்னர்தான் உத்தரவுகள் வெளியிடப் படும். நமது சங்கத்தில் மத்திய தலைமை இந்தப் பிரச்சினை மீது கடுமையான, தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

## நெல்லை மகளிர் தினம்

### நெஞ்சு நிறை பாராட்டு!

நெல்லை மாவட்டம் BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக்குழு சார்பாக மார்ச் 8 மகளிர் தினத்தை முன்னிட்டு பாளையங் கோட்டை சாலமோன் முதியோர் இல்லத்திற்கு ரூ.12000/- பெறுமான தொலைக்காட்சி பெட்டி, உணவுப்பொருட்கள் வழங்கப் பட்டுள்ளது. மகளிர் தினத்தை சமுதாயப் பொறுப்போடு கொண்டாடியதை தமிழ் மாநிலச் சங்கம் மனதாரப் பாராட்டுகிறது. ●

# மாநில சங்கத்திலிருந்து...

## சேலம் சிவில் பகுதி அலுவலக மாற்றம்

சேலத்தில் தனியாரிடத்தில் இருக்கின்ற சிலர் பகுதி அலுவலகத்தை சீலவேரி ஊழியர் குடியிருப்பிற்கு மாற்ற நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், அந்த இடம் பணியாற்றுவதற்கு உகந்த இடம் அல்ல. எனவே மெய்யனார் தொலைபேசி நிலையத்திலுள்ள காலியாக உள்ள இடத்திற்கு அலுவலகத்தை மாற்றலாம் என்பது நம் ஆலோசனை. நிர்வாகம் பரிசீலிக்க ஒத்துக்கொண்டுள்ளது.

## Supervisory பதவி - பாண்டிச்சேரியில்

பாண்டிச்சேரி தந்தி அலுவலகத்தில் இருந்த Supervisory பதவிகளை திடிரென நிர்வாகம் ரத்து செய்துள்ளது. காரணம் கேட்டால் புதிய அளவீட்டின் அடிப்படையில் பதவி இல்லை என புதுவை நிர்வாகம் சொல்கிறது. இது முறையல்ல என வாதிட்டுள்ளோம். பதவியை நிரப்புவதற்கான உத்தரவுகளை மாநில நிர்வாகத்திடம் கொடுத்துள்ளோம். மாநில நிர்வாகம் பரிசீலிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

## அடையாள சான்றிதழ்:

காரைக்குடி தோழர் ஜெகனுக்கு Passport விண்ணப்பிக்க மாவட்ட நிர்வாகம் அடையாள சான்றிதழ் வழங்க வேண்டும். ஆனால் மாவட்ட நிர்வாகத்திற்கு தடையில்லா சான்றிதழ் (NOC) கொடுக்க வேண்டும் என்ற தவறான புரிதலினால் அடையாள சான்றிதழ் வழங்கவில்லை. மாநில நிர்வாகத்திடம் விவாதிக்கப்பட்டபின் அடையாள சான்றிதழ் வழங்க மாவட்ட நிர்வாகதிற்கு வழிகாட்டுதல் தரப்பட்டுள்ளது.

## விருப்ப மாற்றல்

தோழர் நளினி Sr. TOA சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு மாற்றல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ●

# BSNLMRS திட்டம் பரிசீலனை

CGHS கட்டண விகிதங்களை மத்திய அரசு மிகவும் குறைத்து விட்டதால் நல்ல பல தரமான மருத்துவமனைகள் நமது ஊழியர்களுக்கு மருத்துவம் பார்க்க மறுத்துவிட்டன. அதனால் நமது BSNL ஊழியர்கள் சிரமப்படுவ தனால் நமது மத்திய சங்கம் BSNLMRS திட்டம் பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தது. இதனை ஏற்றுக் கொண்ட நிர்வாகம், இது தொடர்பாக நமது துணைப் பொதுச் செயலர் தோழர்.அபிமன்யூ, SNEA சங்கத்தை சார்ந்த தோழர் B.G. பாட்டீல் மற்றும் நிர்வாகத் தரப்பிலிருந்து GM(ESTT), GM(ADMIN), GM(CA), DGM(WELFARE & SPORTS) ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது.

இந்தக் கமிட்டியின் முதல் கூட்டம் 16-03-09 அன்று நடைபெற்றது. அதில் நமது சங்கத்தின் சார்பாக தோழர் . பி.அபிமன்யூ கீழ்கண்ட ஆலோசனைகளை முன்வைத்தார்.

1. CGHS-இன் பழைய கட்டண விகிதத்தின் அடிப்படையில் BSNL நிர்வாகம் மருத்துவ பில்களை தீர்க்க வேண்டும். அப்பொழுது நல்ல தரமான மருத்துவமனைகள் நமது நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட முன்னுக்கு வருவார்கள்.
2. மாற்றுத் திட்டமாக, ஒரு சில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ளது போல, BSNL நிறுவனம், ஒவ்வொரு மாநிலத் தலைநகர்களிலும் ஒரு ‘முன்மாதிரி மருத்துவமனை’யைத் தேர்ந்து எடுக்க வேண்டும். பல்வேறு சிகிச்சைகளுக்கும் அந்த மருத்துவமனை விதிக்கும் கட்டணங்களை மாநிலத்தில் உள்ள மற்ற மருத்துவமனைகளுக்கும் அனுமதிக்கலாம்.

மேலே சொன்ன அந்த ஆலோசனை களுடன் Mediclaim போன்ற உடல் நலக் காப்பீட்டுத் திட்டத்தையும் அந்தக் குழு விவாதித்தது. இறுதியாக இந்தக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் மற்ற பல பொதுத்துறை நிறுவனங்கள் கடைபிடிக்கும் மருத்துவத் திட்டங்களை விரிவாக ஆராய்ந்து ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மே மாதம் முதல் வாரத்தில் நடைபெற உள்ள அடுத்தக் கூட்டத்தில் இது தொடர்பாக முடிவுகள் எடுக்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ●

# BSNL வளர்ச்சியில் கேரள அரசு

கேரள மாநிலத்தில் காவல் துறையில் பணிபுரியும் 40,000 காவலர்களுக்கு BSNL செல் இணைப்புக்கள் வழங்கிட ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மேலும் 436 காவல் நிலை யங்களில் BSNL-ன் பிராட்பேன்ட் சேவை உபயோகப்படுத்தவும் முடிவாகியுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்ட கேரள இடது ஜனநாயக முன்னணி அரசிற்கு அதிலும் குறிப்பாக உள்துறை அமைச்சர் தோழர் கொடியேறி பால கிருஷ்ணனுக்கு நமது உணர்வுபூர்வமான வாழ்த்துக்கள்.

கேரள அரசைப் போலவே நாட்டிலுள்ள அனைத்து மத்திய, மாநில அரசுகளும் பொதுத் துறை நிறுவனங்களும் BSNL இணைப்புக் களை பயன்படுத்த வேண்டும் என்று விரும்பு கிறோம்.

# EPF பணம் வாபஸ்

01-10-2000க்கு பின் BSNL-இல் பணியில் அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித்திட்டம் (EPF) அமுலாக்கப்பட்டு வருகிறது. முதலில் நமது நிறுவனத்தில், ஊழியர்களின் மொத்த சம்பளம் ரூ.500 என்ற உச்சவரம்பின் அடிப் படையில் EPF தொகை பிடிக்கப்பட்டு வந்தது. பின்னர் உச்சவரம்பு எதுவும் கிடையாது என்ற போது மீதமுள்ள தொகையினை Arrears-ஆக நமது ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப் பட்டது.

ஆனால் EPF சட்டத்தின் 32 வது பிரிவின் படி அப்படி Arrears-ஆக பிடிப்பது தவறு என்றும், அப்படி ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து பிடிக்கப்பட்ட Arrears பணத்தை திருப்பித் தரும்படி BSNL தலைமையகத்திற்கு EPF அமைப்புக்கடிதம் எழுதியுள்ளது. கடித எண் : C-IV/7(6)08 / HR / N2.

# ஒப்பந்த ஊழியர் மாநில செயற்குழு முடிவுகள்

தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த சங்க மாநில செயற்குழு 27-02-2009 அன்று புதுச்சேரி யில் நடைபெற்றது. மாநிலத்தலைவர் தோழர். என். சுரேஷ் தலைமையில் நடைபெற்ற செயற்குழுவை தோழர். பி.அபிமன்யூ DGS அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். அவருடைய உரையில் உலக சூழ்நிலையில் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம், வேலை நிரந்தரம் ஆகியவற்றின் தன்மை குறித்தும், எதிர்காலத்தில் சங்கத்தின் மக்கிய பொறுப்புக்களில் ஒப்பந்த ஊழியர்கள் பங்கெடுக்க வேண்டிய அவசியம் குறித்து, எழுச்சி மிகு உரையாற்றினார்.

மாநிலச் செயலர் தோழர் S. செல்லப்பா வாழ்த்துரை வழங்கினார். நீண்ட விவாதங்களுக்கு பின்னர் கீழ்க் கண்ட முடிவுகளை ஒரு மனதாக எடுக்கப்படப்டன.

- விருதுநகர், தூத்துக்குடி தவி அனைத்து மாவட்டங்களிலும் 6 மாதத்திற்கும் மாநாடு நடத்தப்பட வேண்டும்.
- மார்ச் 23 அன்று நடைபெறும் ரத்ததான முகாமை BSNLEU- வுடன் இணைந்து நடத்த வேண்டும்.
- நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஒப்பந்த ஊழியர் தினச் சம்பளத்தை 180, 150, 120 வழங்கிட கீழ்க்கண்ட இயக்கங்கள் நடத்திட வேண்டும்.
- மார்ச் 20 அன்று அஞ்சல் அட்டை இயக்கம்
- ஏப்ரல் 13 முதல் 16 வரை ஒரு வார கால பிரச்சார இயக்கம்
- மேமாத இறுதியில் மாநில அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம்
- BSNLEUவுடன் இணைந்து ஜூன் மாதம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்.

குறைந்த அவகாசத்தில் சிறப்பாக செயற் குழுவை நடத்திட்ட புதுவைத் தோழர்களுக்கு பாராட்டுக்கள். புதுவை செயற்குழு முடிவுகளை ஜரூராக அமல்படுத்துவோம். ●

# பிரான்ஸை உலுக்கும் கறுப்பு வியாழன்

**சோ**வியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்கு பின் முதலாளித்து வத்திற்கு மாற்று இல்லை என்று சொல்லி ஏகாதி பத்தியத்தால் அறிமுகப்படுத்திய உலகமயமாக்கல் கொள்கைகள் இன்று சூறாவளியாய் மாறி உலகத்தில் உள்ள முதலாளித்துவ நாடுகளை கடுமையாய் தாக்கிக் கொண்டிருக்கிறது.

இதன் ஒரு பகுதியாய் பிரான்ஸ் நாடும் தத் தளித்துக் கொண்டு இருக்கிறது. உலகப் பொருளார நெருக்கடியால் அந்நாட்டின் எஃகு, கனரகம், வங்கி, இன்சூரன்ஸ், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட அனைத்து தொழில்களும் கடுமையாக பாதித் துள்ளது. இதனை எதிர்த்து பிரான்ஸ் நாட்டு தொழிற்சங்கங்கள் விடுத்த வேலை நிறுத்தத்தில், கடந்த ஜனவரி 29 அன்று 20 லட்சம் மக்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அதற்குப் பின்னரும் பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் பல நிறுவனங்கள் மூடப்பட் டுள்ளது. இதுவரை பிரான்ஸ் நாட்டில் 20 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இந்த ஆண்டுமட்டும் சுமார் 10 லட்சத்திற்கும் அதிக மானோர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. வறுமை அதிகரித்துள்ளது. விலைவாசி கட்டுக் கடங்காமல் எகிறுகிறது. இதனைக் கண்டித்து மீண்டும் மார்ச் 19 அன்று வேலை நிறுத்தம் நடை பெற்றது. விமானம் போக்குவரத்து, ரயில் போக்கு வரத்து, தபால் சேவை, பள்ளிகள், மருத்துவ மனைகள், தொலைத்தொடர்பு சேவைகள் கடுமை யாக பாதித்துள்ளது. பிரான்ஸ் நாடு முழுவதும் 215க்கும் மேற்பட்ட இடங்களில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துக் கொண்ட ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. அந்நாட்டின் 75 சதமான மக்களால் ஆதரவு தெரிவிக்கப்பட்ட அந்த வேலை நிறுத்தம் உலக முதலாளித்துவத்திற்கு விடப்பட்ட எச்சரிக்கை மணி.

தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையெனில் சகத்தினை அழித்திடலாம் என்று சொன்ன பாரதியின் வாக்குபடி எதிரத்துப் போராடும் பிரான்ஸ் நாட்டு மக்களின் போராட்டம் வெல்லட்டும் என BSNLEU தமிழ் மாநிலச் சங்கம் வாழ்த்துகிறது.

பிரான்ஸை போல இந்திய நாடு பாதிக்காததிற்கு காரணம், உலக மயமாக்கலை எதிர்த்து இந்திய நாடு உழைப்பாளி மக்களாகிய நாம் நடத்திய 12 பொது வேலை நிறுத்தங்கள்தான் என பெருமையுடன் நிமிர்ந்து நிற்போம். ●

## BSNLEUவில் இணைந்தவர்களின் பட்டியல்

### தூத்துக்குடி மாவட்டம்

| எண். | பெயர் | கேடர் | ஊர் |
|---|---|---|---|
| 1. | R.சில்வியா பிருந்தா | TTA | புதியம்புத்தூர் |
| 2. | M. ராஜேஸ்வரி | TTA | தெய்வச்செயல்புரம் |
| 3. | P.முருகன் | TTA | புதுக்கோட்டை |
| 4. | G.மேகலா | TTA | எட்டயபுரம் |
| 5. | J.பீட்டர் | TTA | சாத்தான்குளம் |
| 6. | V.வேல்முருகன் | TTA | ஸ்ரீவைகுண்டம் |
| 7. | C.ரமேஷ் கொரேரா | TTA | தூத்துக்குடி |
| 8. | M.சேர்மதுரை | TTA | தூத்துக்குடி |
| 9. | G.கருத்தப்பாண்டி | TTA | கழுகுமலை |
| 10. | S.செல்வ சரவணன் | TTA | விளாத்திக்குளம் |
| 11. | P.பேபி | TTA | தூத்துக்குடி |
| 12. | A.தங்கராஜ் | TTA | நாசரேத் |
| 13. | M.ராமச்சந்திரன் | TTA | திருச்செந்தூர் |
| 14. | R.நேதாஜி | TTA | குளத்தூர் |
| 15. | G.கிருஷ்ணவேணி | TTA | தூத்துக்குடி |
| 16. | T.சதீஷ்குமார் | TTA | ஆத்தூர் |
| 17. | N.சேர்மராஜ் | TTA | தூத்துக்குடி |
| 18. | சாமுவேல் J. பிரின்ஸ் | TTA | தூத்துக்குடி |

புதிதாக TTA-வாக பணி நியமனம் பெற்று, நம் சங்கத்தில் இணைந்தோரை மாநிலச் சங்கம் மனதார வாழ்த்தி வரவேற்கிறது.

# வரலாற்றில் ஒரு துளி

முதல் உலக யுத்தம் நடைபெற்ற போது, ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக 13 லட்சம் இந்திய வீரர்கள் யுத்தத்தில் கலந்துக் கொண்டனர். ஆனாலும் வீரஞ்செரிந்த வங்காளம் மற்றும் பஞ்சாப் மக்கள் அதனை எதிர்த்தனர். உலக யுத்தத்திற்கு பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாய் இந்திய நாட்டில் பலர் மாண்டனர். பண வீக்கம் அதிகரித்தது. அதிகபட்ச வரி விதிக்கப்பட்டது. இதனால் நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதனை அடக்க ஆங்கில அரசாங்கம் ரவுலட் சட்டம் எனும் மோசமான சட்டத்தை அமுலாக்கினார்கள். பத்திரிக்கைகளின் குரல் வளையை நெறிக்கவும், விசாரணையின்றி அரசியல் தலைவர்களை சிறையிலடைக்கவும், எந்த உத்தரவும் இல்லாமல் யாரையும் கைது செய்யவும் வழிவகை செய்யும் அந்தக் கறுப்புச் சட்டத்தை எதிர்க்க மகாத்மாககாந்தி அறைகூவல் விட்டார்.

போராட்டத்தில் பஞ்சாபில் ரயில், தந்தி சேவைகள் பாதிக்கப்பட்டன. அமிர்சரஸ் நகரில் 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட பேரணி நடைபெற்றது. ஆங்கிலேய அரசாங்கத்தால் கைசெய்யப்பட்ட இந்திய விடுதலைப் போரின் தலைவர்களான சத்யபால் மற்றும் சைபுதின் சிச்சலு ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி 1919 ஏப்ரல் 10ஆம் தேதி அமிர்தசரஸ் நகர காவல்துறை ஆணையரின் வீட்டிற்கு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தினர்.

ஏப்ரல் 13, 1919... பைசாகி திருவிழாவை ஒட்டி பக்கத்து கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் அமிர்தசரஸ் ஜாலியன் வாலாபாக் எனும் பூங்காவில் கூடினர். சுமார் 20,000 பேர் கூடிய அந்தக் கூட்டத்தில் ரவுலட் சட்டத்தை எதிர்த்தும், ஏப்ரல் 10ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும், ஆங்கிலேயே அரசாங்கத்தின் கருப்புச் சட்டங்களை எதிர்த்தும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மூன்றாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது நேரம் மாலை 5:15.

ஏகாதிபத்திய திமிரின் ஒட்டுமொத்த வடிவமான ஜெனரல் டயர் தனது ராணுவ வீரர்களுடன் அந்தப் பூங்காவின் திறந்திருக்கும் ஒரே வாயிலின் வழியாக நுழைந்தான். கூடியிருந்த அப்பாவி ஜனங்களின் மீது எந்தவிதமான எச்சரிக்கையும் செய்யாமல் துப்பாக்கி குண்டுகளை பொழிந்தான். சுவர் ஏறி தப்பிக்க நினைத்தவர்களைக்கூட விட்டுவைக்கவில்லை. பெண்கள், பச்சிளம் குழந்தைகள் உட்பட ஆயிரத்து ஐநூற்று இருபத்தி ஆறுபேரின் உயிர்களை சாய்த்தபின் துப்பாக்கிகளில் குண்டு தீர்ந்ததால் வெளியேறினான். பல்லாயிரக்கணக்கானோர் காயமுற்றனர். உயிர் பிழைக்க பூங்காவின் நடுவில் இருந்த கிணற்றில் பலர் குதித்தனர். அந்தக் கிணற்றிலிருந்து மட்டும் இருநூற்றிப் பத்து சடலங்கள் மீட்கப்பட்டன. நாகரீக உலகமே வெட்கித் தலை குனிந்தது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அமைதியாக போராடி ஆயிரக்கணக்கானோர் அந்த ஜாலியன் வாலாபாத்தில் உயிர் நீத்தது ஏப்ரல் 13இல். இந்த ஆண்டு அந்த தியாகிகளின் 90வது நினைவு நாள். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நம்நாட்டில் நுழைந்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்தை வீழ்த்த உறுதியேற்போம். ●